**சிறப்பு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை தடுப்பு சட்டம், வேலூர்.**
**வேலூர் மாவட்டம்.**

**முன்னிலை : திரு.G.ராதாகிருஷ்ணன்,**

அமர்வு நீதிபதி, வேலூர்.
(JO CODE TN 01821)

2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள், திங்கட்கிழமை

**சிறப்பு அமர்வு வழக்கு எண்.13 / 2024**

**(CNR.No.TNVL29-000315-2024)**

| | |
|---|---|
| தீர்ப்புக்கு ஒத்தி வைக்கப்பட்ட நாள்:11.09.2025 | தீர்ப்பளிக்கப்பட்ட நாள்:15.09.2025 |

| | | |
|---|---|---|
| | குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>வேலூர் கிராமிய காவல் நிலையம்.<br>குற்ற எண்.142/2023 |
| | எதிரிகளின் பெயர் மற்றும் விலாசம் | 1. வினோத்குமார், த/பெ.ஜெயசீலன்,<br>வயது 32,<br>எண்.65, புது தெரு, மோட்டுபாளையம், வேலூர் தாலுக்கா.<br>2. இளவரசன், த/பெ.வெங்கடேசன்,<br>வயது 27,<br>எண்.45, பிள்ளையார் கோயில் தெரு, கம்மசமுத்திரம் கிராமம், வேலூர்.<br>3. கபிலன், த/பெ.நடராஜன்,<br>வயது 19,<br>எண்.84பி, பள்ளி தெரு,<br>கம்மசமுத்திரம், மொட்டுபாளையம்,<br>வேலூர் தாலுக்கா<br>4.நம்பிவர்மன், த/பெ.நடேசன், |

<table>
<tr><td></td><td></td><td>வயது 19,<br>எண்.1/90, பிள்ளையார் கோவில் தெரு, கம்மசமுத்திரம், வேலூர் தாலுக்கா.<br>5. கரண், த/பெ.சங்கர்,<br>வயது 19,<br>எண்.50எ, பிள்ளையார் கோவில் தெரு, கம்மசமுத்திரம், மொட்டுபாளையம், வேலூர் தாலுக்கா.<br>6. நவீன், த/பெ.பிச்சாண்டி<br>வயது 18<br>எண்.155, ஆற்காடு ரோடு, கொங்கரம்பட்டு, திருவண்ணாமலை.</td></tr>
<tr><td colspan="3">எதிரிகளின் மீது நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றசாட்டுக்கள் விபரம்</td></tr>
<tr><td colspan="3">1. இ.த.ச. பிரிவு 147 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1 முதல் 6ம் எதிரிகளுக்கு எதிராக<br>2. இ.த.ச. பிரிவு 148 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1ம் எதிரிக்கு எதிராக<br>3. இ.த.ச. பிரிவு 294 (b) உ/இ 3 (1) (r) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1 முதல் 6ம் எதிரிகளுக்கு எதிராக<br>4. பிரிவு 3 (1) (s) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1 முதல் 6ம் எதிரிகளுக்கு எதிராக<br>5. இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 2, 3, 4 மற்றும் 6ம் எதிரிகளுக்கு எதிராக<br>6. இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் உ/இ 149 – 1 மற்றும் 5ம் எதிரிகளுக்கு எதிராக<br>7. இ.த.ச. பிரிவு 326 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1ம் எதிரிக்கு எதிராக<br>8. இ.த.ச. பிரிவு 326 உ/இ 149 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 2 முதல் 6ம் எதிரிகளுக்கு எதிராக<br>9. இ.த.ச. பிரிவு 506 (ii) உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும்</td></tr>
</table>

| | |
|---|---|
| பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் – 1 முதல் 6ம் எதிரிகளுக்கு எதிராக | |
| எதிரிகளின் பதிலுரை | குற்றவாளி இல்லை |

<u>நீதிமன்றத்தின் முடிவு – தீர்ப்பு விவரம்</u>

முடிவாக எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியதன் காரணமாக சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை இவ்வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவித்து கு.வி.மு.ச. பிரிவு 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ள சா.பொ.1 (C.P.No.16/2023) பீர்பாட்டில் உடைந்த நிலையில் உள்ளது. ஆனால் இவ்வழக்கில் இளம் சிறாருக்கு எதிரான மற்றொரு வழக்கு இதே சம்பவத்தின் சார்பாக நிலுவையில் இருப்பதால் அந்த வழக்கில் இந்த வழக்கு சொத்து குறித்து ஏற்படும் உத்தரவைப் பொருத்து வழக்கு சொத்தை கையாளவேண்டும். அந்த வழக்கு முடிவுற்றிருந்தால் இந்த வழக்கு சொத்து அந்த வழக்கிற்கு தேவைப்படாது என்றால் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அந்த சொத்தை குற்றவியல் நடைமுறை விதி 262 படிக்கு அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் இந்த வழக்கில் எழுதிக் கொடுத்த பிணையப் பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

## <u>Particulars under Rule 106 of Criminal Rules of Practice, 2019</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | Name of the Police Station and the Crime Number of the offence | : | The Deputy Superintendent of Police, Vellore Taluk P.S.<br>Cr.No.142/2023<br>U/s.147, 148, 323, 326, 506(ii) IPC & 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Amendment Act 2015. |
| 2. | Name, age, occupation and residence of the Accused | : | 1. Vinoth Kumar, S/o.Jayaseelan, aged about 32 years, No.65, Puthu Street, Mottupalayam, Vellore Taluk.<br>2. Elavarasan, S/o.Venkatesan, aged about 27 years, No.45, Pillaiyar Koil Street, Kammasamuthiram Village, Vellore Taluk.<br>3. Kabilan, S/o.Natarajan, |

| | | | |
|---|---|---|---|
| | | | aged about 19 yeas,<br>No.84B, School Street,<br>Kammasamuthiram, Mottupalayam,<br>Vellore Taluk.<br>4. Nambivarman, S/o.Nadesan,<br>aged about 19 years,<br>No.1/90, Pillaiyar Koil Street,<br>Kammasamuthiram, Vellore Taluk.<br>5. Karan, S/o. Sankar,<br>aged about 19 years,<br>No.50A, Pillaiyar Koil Street,<br>Kammasamuthiram, Mottupalayam,<br>Vellore Taluk.<br>6. Naveen S/o.Pichandi,<br>aged about 18 years,<br>No.155, Arcot Road, Kongarampattu,<br>Kannamangalam, Tiruvannamalai Dist. |
| 3. | Occurrence | : | 23.05.2023 |
| 4. | Complaint | : | 24.05.2023 |
| 5. | Apprehension | : | A1 to A5 arrested on 24.05.2023<br>A6 Surrendered on 17.10.2023 and as per order in Crl.M.P.No.1208/2023 released on bail. |
| 6. | Released on bail | : | A1, A2, A3 and A4 released on bail on 14.06.2023 as per order in Crl.M.P.No.570/2023 dated 14.06.2023<br>A5 released on bail on 15.06.2023 as per order in Crl.M.P.No.617/2023<br>A6 released on bail on 17.10.2023 as per order in Crl.M.P.No.1208/2023 |
| 7. | Commencement of trial | : | 24.04.2025 |
| 8. | Closure of Trial | : | 14.08.2025 |
| 9. | Verdict and Sentence | : | Acquittal |
| 11. | Explanation of delay | : | - |

**<u>Details of Case Summary</u>**

| | | | |
|---|---|---|---|
| 12. | The date of filing of the complaint | : | 25.05.2023 |

| | | | |
|---|---|---|---|
| 13. | The period of remand of the accused | : | A1 to A4 -24.05.2023 to 14.06.2023<br>A5 – 24.05.2023 to 15.06.2023<br>A6 – 17.10.2023 (Surrendered and released on bail) |
| 14. | The date of filing of the police report in the court (Final Report / Charge Sheet) | : | 06.03.2024 |
| 15. | The date of Taken Cognizance / Taken on file | : | 14.03.2024 |
| 16. | The date of questioning the accused U/s.228 of Cr.P.C. | : | 06.03.2025 |
| 17. | The filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior courts, except routine petitions like petition U/s.317 of Cr.P.C.: | | |

| Sl.No. | Crl.M.P.No. | Section | Date of decision | Decision |
|---|---|---|---|---|
| 1. | 1208/2023 | U/s.439 of Cr.P.C. | 17.10.2023 | Allowed |
| 2. | 577/2024 | Surrender Petition | 24.05.2024 | Permitted to surrender |

| | | | |
|---|---|---|---|
| 18. | Date of examination of the accused U/s.313 of Cr.P.C. | : | 20.08.2025 |

**Date of Examination of Witnesses:**

| PWs | Name of the witnesses | Chief examination | Cross examination by Prosecution | Cross examination by Defence |
|---|---|---|---|---|
| P.W.1 | Tr.K.Surya | 24.04.2025 | Cross examined | Not cross examined |
| P.W.2 | Tr.K.Ajithkumar | 24.04.2025 | Cross examined | Not cross examined |
| P.W.3 | Tr.D.Santhoshkumar | 06.05.2025 | Cross examined | Not cross examined |
| P.W.4 | Tr.P.Prabhu | 06.05.2025 | Cross | Not cross |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | examined | examined |
| P.W.5 | Tr.P.Anbu | 22.05.2025 | Cross examined | Not cross examined |
| P.W.6 | Tr.J.Murugavel | 22.05.2025 | Cross examined | Not cross examined |
| P.W.7 | Tr.B.Senthil | 02.06.2025 | Cross examined | No cross reported |
| P.W.8 | Tr.G.Silambarasan | 15.07.2025 | Not cross examined | 15.07.2025 |
| P.W.9 | Tr.R.Narasimman | 15.07.2025 | Not cross examined | 15.07.2025 |
| P.W.10 | Tr.E.Thirunavukarasu | 14.08.2025 | Not cross examined | 14.08.2025 |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் சிறப்பு அமர்வு வழக்கு எண்.13/2024 என்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 11.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், அரசு வழக்கறிஞர் திரு.S.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திருமத.S.வளர்மதி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்;

<u>**தீர்ப்புரை**</u>

1. <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**</u>:–

*1.1.* இவ்வழக்கின் புகார்தாரரான திரு.K.சூர்யா அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்என்றும் அவர் வேலூர் முத்துரங்கம் ஆர்ட்ஸ் காலேஜில் படித்து வருவதாகவும் கடந்த இரண்டு நாட்களுக்கு

முன்பு கம்மசமுத்திரத்தில் நடைபெற்ற நாடகத்தை பார்க்க வந்த கம்மவான்பேட்டை ஊரைச் சேர்ந்த வன்னியர் இனத்தைச் சேர்ந்த சிலருக்கும் அவரின் ஊரைச் சேர்ந்த ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது என்றும் கடந்த 23.05.2023 அன்று பக்கத்து ஊரான கம்மவான் பேட்டையில் தீமிதி திருவிழாவை முன்னிட்டு இரவு சுமார் 7.00 மணிக்கு பள்ளிக்கூட மைதானத்தில் நடந்த ஆடல் பாடல் நிகழ்ச்சியைப் பார்க்க சென்றதாகவும் அப்போது இரவு சுமார் 9.00 மணயளவில் அவருக்கு ஏற்கனவே தெரிந்த வன்னியர் இனத்தைச் சேர்ந்த மோட்டுப்பாளையத்தைச் சேர்ந்த ஜெயசீலன் மகன் வினோத் குமார், வெங்கடேசன் மகன் இளவரசன், நடராஜன் மகன் கபிலன், நடேசன் மகன் நம்பிவர்மன், கணேசன் மகன் சச்சின், சங்கர் மகன் கரண் மற்றும் நவீன் குமார் ஆகியோர் மஞ்சள் நிற துணியால் முகத்தை மூடிக்கொண்டு வந்து அவரைப் பார்த்து பர தேவிடியா பையா வன்னியர் நடத்தும் திருவிழாவில் நீ ஏன்டா கலந்து கொள்கிறாய் என்று அவரின் சாதி பெயரைச் சொல்லி திட்டி இளவரசன் என்பவர் அவரை கழுத்தில் கையால் குத்தி கீழே தள்ளி கால்களால் எட்டி உதைத்து நாடகம் பார்க்க வந்த எங்க சாதிகாரனை அடிச்சீங்களா, எங்க சாதி காரனை தொட்டா என்ன நடக்கும் என்று உங்களுக்கு தெரியனும், உங்க ஊர்ல போய் நீ சொல்லுடா எங்க சாதிகாரனை பார்த்தா நீங்க பயப்படனும் என்று சொல்லி கபிலன், நவீன், நம்பிவர்மன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து கைகளால் காலாலும் அவரைத் தாக்கியதாகவும் அவர் வலி தாங்காமல் கத்தியதாகவும் அப்போது இளவரசன் பள்ளி மாடியில் இருந்து அவரை கீழே தள்ளிவிட்டதாகவும் அதனால் அவருக்கு கீழே விழுந்ததில் அவரின் இடது கை தோள்பட்டை அருகில், இடது கை மணிக்கட்டு

ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் கீழே விழுந்த அவரை இளவரசன், கபிலன், நம்பிவர்மன், சச்சின், கரண் மற்றும் நவீன் குமார் ஆகியோர் அவரின் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும்போது வினோத் குமார் அருகில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து அவரின் தலையின் வலது பக்கத்திலும், தலையின் பின் பக்கத்திலும் பீர் பாட்டிலாலும் அடித்ததாகவும் பின்னர் உடைந்த பீர் பாட்டிலால் அவரின் வலது பக்க கண் அருகில் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் உன்னை உயிரோடு விடமாட்டோம் என்றும் மிரட்டிவிட்டு ஓடிவிட்டதாகவும் பின்னர் அவர் அவரின் உறவினரான பிச்சாண்டி என்பவரை வரவழைத்து 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

*1.2.* அ.சா.9, திரு.ரா.நரசிம்மன், காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரர் கொடுத்த புகாரைப் பெற்று வேலூர் கிராமிய காவல் நிலைய குற்ற எண்.142/2023 பிரிவுகள்.147, 148, 294 (b), 323, 324, 506(ii) of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். சம்மந்தப்பட்ட அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் புகார், முதல் தகவல் அறிக்கை நகல்களை வேலூர் மாவட்டம் கண்காணிப்பாளர் அவர்கள், குடியாத்தம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். மேலும் இவ்வழக்கு எஸ்சி/எஸ்டி கீழ் வருவதால் புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

*1.3.* அ.சா.10 திரு.திரு.எ.திருநாவுக்கரசு வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 24.05.2023 அன்று வேலூர் மாவட்ட பொறுப்பு காவல் கண்காணிப்பாளர் அவர்களால் புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு பகல் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்தோஷ்குமார் மற்றும் முருகவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயாரித்து அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவத்தின் போது எதிரி வினோத்குமார் பயன்படுத்திய உடைந்த பீர் பாட்டிலை மகசரில் கைப்பற்றியுள்ளார்.

*1.4.* அ.சா.10 திரு.திரு.எ.திருநாவுக்கரசு வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சாட்சிகள் சூர்யா, அன்பு, அஜித்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிறகு கண்ணமங்கலம் கேட் அருகே இருந்த எதிரிகள் வினோத்குமார், இளவரசன், கபிலன், நம்பிவர்மன் மற்றும் கரண் ஆகியோர்களை 17.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து அங்கு வந்த சாட்சிகள் பிரபு மற்றும் சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் எதிரி வினோத்குமாரை விசாரிக்க அவர் எந்தவித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளும் இன்றி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

*1.5.* அ.சா.10 திரு.திரு.எ.திருநாவுக்கரசு வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 19.30 மணிக்கு எதிரிகளுடன் நிலையம் வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். கைப்பற்றப்பட்ட சொத்தை

படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பிறகு சாட்சிகள் சந்தோஷ்குமார், முருகவேல், பிரபு, சிலம்பரசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் மற்றும் வாதி ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ் கேட்டு வேலூர் வட்டாட்சியர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளார். கடந்த 26.05.2023ந் தேதி சாட்சிகள் அன்பு, சூர்யா ஆகியோர்களையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.நரசிம்மன் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

*1.6.* அ.சா.10 திரு.திரு.எ.திருநாவுக்கரசு வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 05.07.2023ந் தேதியன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட இளஞ்சிறார் சச்சின் என்பவரை அவரது வீட்டின் முன்பு அவரது தந்தை கணேசன், குழந்தை நல அலுவலர் முன்பு காரணம் கூறி கையகப்படுத்தி இளஞ்சிறார் நீதித்துறை முன்பு ஆஜர்படுத்தியுள்ளார். தலைமைக் காவலர் 1891 திரு.கணபதி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வேலூர் வட்டாட்சியர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து எதிரிகளுக்கும், வாதிக்கும் சாதி சான்றிதழ் பெற்றுள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட சாட்சி சூர்யா என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் கிப்ட்சன் ஜோசப் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காய சான்று பெற்றுள்ளார்.

*1.7.* சாட்சி சூர்யாவிற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 147, 148, 294(b), 323, 324, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act என்று

இருந்ததை ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act படிக்கு பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றத்திற்கு படிவம் 95 மூலம் அனுப்பி வைத்துள்ளார். கடந்த 01.11.2023ந் தேதியன்று தனி வழக்கறிஞர் எஸ்சி/எஸ்டி அவர்களின் கருத்துரைப் பெற்று எதிரிகளின் மீது ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. வழக்கு கோப்புகளையும், ஆவணங்களையும் ஆய்வு செய்து இந்த வழக்கை இந்நீதிமன்றம் Spl.SC.No.13/2024 கோப்புக்கு எடுத்துள்ளது.

3. பின்னர் நீதிமன்றத்தில் இருந்து எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் 14.10.2024 அன்று கு.வி.மு.ச. பிரிவு 207—ன் கீழ் வழக்கின் ஆவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. பிறகு இருதரப்பு வாதங்களைக் கேட்ட பின்னரும், கோப்புகளை ஆராய்ந்த பின்னரும் எதிரிகள் மீதான குற்றங்கள் குறித்து முதல்நோக்கு வழக்கு இருப்பதாக திருப்தி அடைந்த நிலையில், 06.03.2025 அன்று எதிரிகள் மீது இத்தீர்ப்பின் முன் பகுதியில் விளக்கியுள்ளது போல் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக குற்றசாட்டுகள் வனைந்து தமிழில் படித்துக் காட்டி விளக்கி வினவிய போது எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என எடுத்துரைத்தார்கள். எனவே இவ்வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின்

விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசு தரப்பில் 12 சாட்சிகள் பட்டியலில் காட்டப்பட்டு 10 சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.10 ஆக விசாரணை செய்யப்பட்டு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.19 வரையில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் சான்று பொருட்கள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் இருந்து புலனாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:–**

**6. புகார் வாக்குமூலம்:–**

*6.1.* இவ்வழக்கின் புகார்தாரரான திரு.K.சூர்யா அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்றும் ஏற்கனவே கம்மவான்பேட்டை ஊரைச் சேர்ந்த வன்னியர் இனத்தைச் சேர்ந்த சிலருக்கும் அவரின் ஊரைச் சேர்ந்த ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த சிலருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது என்றும் கடந்த 23.05.2023 அன்று பக்கத்து ஊரான கம்மவான் பேட்டையில் தீமிதி திருவிழாவை முன்னிட்டு இரவு சுமார் 7.00 மணிக்கு பள்ளிக்கூட மைதானத்தில் நடந்த ஆடல் பாடல் நிகழ்ச்சியைப் பார்க்க சென்றதாகவும் அப்போது இரவு சுமார் 9.00 மணயளவில் அவருக்கு ஏற்கனவே தெரிந்த வன்னியர் இனத்தைச் சேர்ந்த மோட்டுப்பாளையத்தைச் சேர்ந்த ஜெயசீலன் மகன் வினோத் குமார், வெங்கடேசன் மகன் இளவரசன், நடராஜன் மகன் கபிலன், நடேசன் மகன் நம்பிவர்மன், கணேசன் மகன் சச்சின், சங்கர் மகன் கரண்

மற்றும் நவீன் குமார் ஆகியோர் மஞ்சள் நிற துணியால் முகத்தை மூடிக்கொண்டு வந்து அவரைப் பார்த்து பர தேவிடியா பையா வன்னியர் நடத்தும் திருவிழாவில் நீ ஏன்டா கலந்து கொள்கிறாய் என்று அவரின் சாதி பெயரைச் சொல்லி திட்டி இளவரசன் என்பவர் அவரை கழுத்தில் கையால் குத்தி கீழே தள்ளி கால்களால் எட்டி உதைத்து நாடகம் பார்க்க வந்த எங்க சாதிகாரனை அடிச்சீங்களா, எங்க சாதி காரனை தொட்டா என்ன நடக்கும் என்று உங்களுக்கு தெரியனும், உங்க ஊர்ல போய் நீ சொல்லுடா எங்க சாதிகாரனை பார்த்தா நீங்க பயப்படனும் என்று சொல்லி கபிலன், நவீன், நம்பிவர்மன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து கைகளால் காலாலும் அவரைத் தாக்கியதாகவும் அவர் வலி தாங்காமல் கத்தியதாகவும் அப்போது இளவரசன் பள்ளி மாடியில் இருந்து அவரை கீழே தள்ளிவிட்டதாகவும் அதனால் அவருக்கு கீழே விழுந்ததில் அவரின் இடது கை தோள்பட்டை அருகில், இடது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் கீழே விழுந்த அவரை இளவரசன், கபிலன், நம்பிவர்மன், சச்சின், கரண் மற்றும் நவீன் குமார் ஆகியோர் அவரின் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும்போது வினோத் குமார் அருகில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து அவரின் தலையின் வலது பக்கத்திலும், தலையின் பின் பக்கத்திலும் பீர் பாட்டிலாலும் அடித்ததாகவும் பின்னர் உடைந்த பீர் பாட்டிலால் அவரின் வலது பக்க கண் அருகில் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் உன்னை உயிரோடு விடமாட்டோம் என்றும் மிரட்டிவிட்டு ஓடிவிட்டதாகவும் பின்னர் அவர் அவரின் உறவினரான பிச்சாண்டி என்பவரை வரவழைத்து 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் வேலூர் கிராமிய காவல்

நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

*6.2.* அ.சா.9, திரு.ரா.நரசிம்மன், காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரர் கொடுத்த புகாரைப் பெற்று வேலூர் காவல் நிலைய குற்ற எண்.142/2023 பிரிவுகள்.147, 148, 294 (b), 323, 324, 506(ii) of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். சம்மந்தப்பட்ட அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் புகார், முதல் தகவல் அறிக்கை நகல்களை வேலூர் மாவட்டம் கண்காணிப்பாளர் அவர்கள், குடியாத்தம் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார். மேலும் இவ்வழக்கு எஸ்சி/எஸ்டி கீழ் வருவதால் புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

*6.3.* அ.சா.10 திரு.எ.திருநாவுக்கரசு, வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 24.05.2023 அன்று வேலூர் மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு வழக்கை புலன் விசாரணைக்கு கடந்த 24.05.2023 எடுத்துக் கொண்டு மேலே சொன்ன விதத்தில் புலன் விசாரணையை முடித்து சாட்சி சூர்யாவிற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 294(b), 323, 324, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act என்று இருந்ததை ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act படிக்கு என பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

கடந்த 01.11.2023ந் தேதியன்று தனி வழக்கறிஞர் எஸ்சி/எஸ்டி அவர்களின் கருத்துரைப் பெற்று எதிரிகளின் மீது ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>வழக்கு விசாரணையின்போது அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களின் சுருக்கம்:-</u>**

**<u>7. அ.சா.1 கி.சூர்யா (புகார்தாரர்):–</u>**

இவ்வழக்கில் அ.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட புகார்தாரர் திரு.சூர்யா தான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர் என்றும் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியும் என்றும் அவர் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு கம்மவான்பேட்டை ஆடல் பாடல் நிகழ்ச்சிக்கு சென்றபோது அந்த திருவிழாவில் சண்டை நடந்தது என்றும் அதில் அவர் மாட்டிக்கொண்டதாகவும் அந்த ஊரில் அவரை அடித்துவிட்டார்கள் என்றும் அதனால் அவரின் முதுகு, தலையில் அடிபட்டுவிட்டதாகவும் சண்டையில் யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை என்றும் மயக்கத்தில் இருந்ததால் எதில் அடித்தார்கள் என்று தெரியவில்லை என்றும் புகாரில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அதை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்றும் அதில் உள்ள விவரங்கள் குறித்து தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**<u>8. அ.த.சா.2 கி.அஜித்குமார்:–</u>**

இவ்வழக்கில் அ.த.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட கி.அஜித் குமார்

என்பவர் அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும் அ.சா.1 சூர்யா அவரின் உடன் பிறந்த சகோதரர் என்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் அவர்கள் வன்னியர் வகுப்பை சார்ந்தவர்கள் என்றும் கம்மவான் பேட்டைக்கு அவரின் தம்பி சூர்யா திருவிழாவிற்கு சென்றிருந்ததாகவும் அங்கு அவருக்கு அடிபட்டதாக தகவல் சொன்னார் என்றும் அதன்பிறகு அவர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**9. அ.த.சா.3 தே.சந்தோஷ்குமார்:-**

இவ்வழக்கில் அ.த.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட தே.சந்தோஷ்குமார் என்பவர் தான் இந்து இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும் அ.சா.1 சூர்யாவை தெரியும் என்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பங்கள் தன்னுடையதுதான் என்றும் அவைகளில் அவரும் முருகவேல் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் வெள்ளை தாளில் கையொப்பம் செய்ததாகவும் அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**10. அ.த.சா.4 பி.பிரபு:-**

இவ்வழக்கில் அ.த.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட பி.பிரபு என்பவர் தான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும் அ.சா.1 சூர்யா தனக்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரிகளைத் தெரியும் என்றும் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு சண்டை நடந்ததாகவும் எதற்காக சண்டை

என்பது தெரியாது என்றும் வினோத்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவரும் சிலம்பரசன் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**11. அ.த.சா.5 ப.அன்பு:–**

இவ்வழக்கில் அ.த.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட ப.அன்பு அ.சா.1 சூர்யா தனக்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் அ.சா.1 சூர்யா கம்மவான்பேட்டையில் நடைபெற்ற ஆடலும் பாடலும் நிகழ்ச்சிக்கு அவரை அழைத்திருந்ததாகவும் சூர்யா வந்ததும் போனதும் தெரியவில்லை என்றும் மறுநாள் சண்டை நடந்ததாக அவரிடம் போனில் சொன்னதாகவும் இந்த வழக்கைப் பற்றி வேறு எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**12. அ.த.சா.6 ஜெ.முருகவேல்:–**

இவ்வழக்கில் அ.த.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட ஜெ.முருகவேல் என்பவர் அ.சா.1 சூர்யா தனக்கு தெரியும் என்றும் ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும் அ.சா.1 சூர்யாவை அடித்துவிட்டதாக சொன்னதாகவும் யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் அவரும் அவரின் நண்பர் சந்தோஷ் என்பவரும் கையொப்பம் செய்ததாகவும் போலீசார் சண்டை என சொல்லி கையொப்பம் கேட்டதால் கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்து

அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

<u>13. அ.த.சா.7 பா.செந்தில் (வட்டாட்சியர்):-</u>

இவ்வழக்கில் அ.த.சா.7 ஆக விசாரிக்கப்பட்ட பா.செந்தில், வட்டாட்சியர், வேலூர் மாவட்ட துணைக் கண்காணிப்பாளர் அவர்கள் கம்மசமுத்திரம் கிராமத்தைச் சேர்ந்த 1.கபிலன், த/பெ.நடராஜன், 2.நம்பிவர்மன், த/பெ.நடேசன், 3.கரண், த/பெ.சங்கர், 4.நவீன், த/பெ.பிச்சாண்டி, 5.சச்சின், த/பெ.கணேசன், 6.இளவரசன், த/பெ,வெங்கடேசன், 7.வினோத்குமார், த/பெ.ஜெயசீலன் ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ் கேட்டு கொடுத்த வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க மேற்படி 1 முதல் 5 வரை உள்ள நபர்கள் இதற்கு முன்பாகவே சாதி சான்றிதழ் கணினி மூலம் பெற்றுள்ளதால் அதனை சரிபார்த்து மேற்படி 5 நபர்களும் வன்னியர் குல சத்திரியர் என்றும் மற்றும் 6, 7நபர்களுக்கு  கணியம்பாடி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கணியம்பாடி வருவாய் ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்து அறிக்கையைப் பெற்று மேற்படி நபர்கள் இந்து வன்னியர் வகுப்பை சார்ந்தவர்கள் என்றும்  மெய்த்தன்மை அறிக்கை சமர்ப்பித்ததாகவும் மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்ட கம்மசமுத்திரம் காலனி, அம்பேத்கர் தெருவைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் மகன் சூர்யா அவர்களின் சாதி சான்றிதழ் மெய்த்தன்மைக் குறித்து வேண்டுகோள் கடிதத்திற்கிணங்க இதற்கு முன்பாகவே சூர்யா என்பவர் கணினி மூலம் சாதி சான்றிதழ் பெற்றுள்ளதால் கணினி மூலம் சரிப்பார்த்து மேற்படி சூர்யா என்பவர் இந்து, ஆதிதிராவிட சாதியைச் சார்ந்தவர் என்று சாதி சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள சாதி சான்றிதழ் மெய்த்தன்மை உடையது தான் என்று

அறிக்கை வழங்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**14. அ.த.சா.8 கு.சிலம்பரசன்:–**

இவ்வழக்கில் அ.த.சா.8 ஆக விசாரிக்கப்பட்ட கு.சிலம்பரசன் என்பவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும் அ.சா.1 சூர்யாவை தெரியும், அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சார்ந்தவர் என்றும் ஆஜராகியுள்ள எதிரிகளைத் தெரியும் என்றும் அவர்கள் MBC வகுப்பை சார்ந்தவர்கள் என்றும் ஆஜர் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றும் இவ்வழக்கில் புகார்தாரரான சூர்யாவை அடித்துவிட்டதாக கம்மசமுத்திரம் எடி காலனி, புளியமரத்தின் அருகில் இரத்தகாயத்துடன் வந்தார் என்றும் இளவரசன், வினோத் இவர்கள் எல்லாம் அடித்துவிட்டதாக அழுதார் என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதால் அவரும் பிரபுவும் கையெழுத்து போட்டதாகவும் சாட்சியம் அளித்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**15. அ.த.சா.9 ரா.நரசிம்மன் (காவல் உதவி ஆய்வாளர்):–**

இவ்வழக்கில் அ.த.சா.9 ஆக விசாரிக்கப்பட்ட ரா.நரசிம்மன், காவல் உதவி ஆய்வாளர் புகார்தாரர் கொடுத்த புகாரைப் பெற்று வேலூர் காவல் நிலைய குற்ற எண்.142/2023 பிரிவுகள்.147, 148, 294 (b), 323, 324, 506(ii) of I.P.C. r/w 3 (1) (r), 3 (1) (s), 3 (2) (va) of SC/ST Act ன் கீழ் வழக்கு பதிவு செய்துள்ளதாகவும் சம்மந்தப்பட்ட அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் மேலும் புகார், முதல் தகவல் அறிக்கை நகல்களை

வேலூர் மாவட்டம் கண்காணிப்பாளர் அவர்கள், வேலூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளதாகவும் மேலும் இவ்வழக்கு எஸ்சி/எஸ்டி கீழ் வருவதால் புலன் விசாரணை அதிகாரியை நியமிக்க வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் சாட்சியம் அளித்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

<u>16. அ.த.சா.10 எ.திருநாவுக்கரசு (காவல் துணை கண்காணிப்பாளர்):-</u>

இவ்வழக்கின் அ.த.சா.10 ஆக விசாரிக்கப்பட்ட திரு.எ.திருநாவுக்கரசு, வேலூர் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கடந்த 24.05.2023 அன்று வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டு வழக்கை புலன் விசாரணைக்கு கடந்த 24.05.2023 எடுத்துக் கொண்டு மேலே சொன்ன விதத்தில் புலன் விசாரணையை முடித்து சாட்சி சூர்யாவிற்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவை 147, 148, 294(b), 323, 324, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act என்று இருந்ததை ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act படிக்கு என பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் கடந்த 01.11.2023ந் தேதியன்று தனி வழக்கறிஞர் எஸ்சி/எஸ்டி அவர்களின் கருத்துரைப் பெற்று எதிரிகளின் மீது ச/பி.147, 148, 323, 326, 506(ii) IPC and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST (PoA) Act இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியங்கள்

முடிக்கப்பட்டது.

17. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் படி கேள்விகள் கேட்க எதிரிகள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். இருதரப்பு வாய்மொழி வாதங்கள் கேட்கப்பட்டது.

18. ***தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இந்த வழக்கின் எதிரிக்கு எதிராக வனையப்பட்ட மேற்படி குற்றசாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?***

19. அரசு தரப்பு வழக்குப்படி கடந்த 23.05.2023 அன்று இரவு 9.00 மணியளவில் இவ்வழக்கின் புகார்தாரரான சூர்யாவும் அவர் நண்பரான அன்புவும் கம்மசமுத்திரத்தில் நடந்த ஆடல் பாடல் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தபோது மேற்படி சூர்யா ஆதிதிராவிடர் என்பதால் இவ்ழக்கின் எதிரிகளான ஆறு பேரும் மற்றும் இளம் சிறார் சச்சின் என்பவரும் வன்னியர் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, புகார்தாரரைப் பார்த்து, பர தேவிடியா பையா வன்னியர் நடத்தும் திருவிழாவில் நீ ஏன்டா கலந்து கொள்கிறாய் என்று அவரின் சாதி பெயரைச் சொல்லி திட்டி இவ்வழக்கின் 2ம் எதிரி இளவரசன் என்பவர் அவரை கழுத்தில் கையால் குத்தி கீழே தள்ளி கால்களால் எட்டி உதைத்து நாடகம் பார்க்க வந்த எங்க சாதிகாரனை அடிச்சீங்களா, எங்க சாதி காரனை தொட்டா என்ன நடக்கும் என்று

உங்களுக்கு தெரியனும், உங்க ஊர்ல போய் நீ சொல்லுடா எங்க சாதிகாரனை பார்த்தா நீங்க பயப்படனும் என்று சொல்லி 3ம் எதிரி கபிலன், 4ம் எதிரி நம்பிவர்மன் மற்றும் 6ம் எதிரி நவீன் ஆகியோர் கூட்டாக சேர்ந்து கைகளால் காலாலும் அவரைத் தாக்கியதாகவும் அவர் வலி தாங்காமல் கத்தியதாகவும் அப்போது இளவரசன் பள்ளி மாடியில் இருந்து அவரை கீழே தள்ளிவிட்டதாகவும் அதனால் அவருக்கு கீழே விழுந்தததில் அவரின் இடது கை தோள்பட்டை அருகில், இடது கை மணிக்கட்டு ஆகிய இடங்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டதாகவும் கீழே விழுந்த அவரை இளவரசன், கபிலன், நம்பிவர்மன், சச்சின், கரண் மற்றும் நவீன் குமார் ஆகியோர் அவரின் கழுத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும்போது வினோத் குமார் அருகில் இருந்த பீர் பாட்டிலை எடுத்து அவரின் தலையின் வலது பக்கத்திலும், தலையின் பின் பக்கத்திலும் பீர் பாட்டிலாலும் அடித்ததாகவும் பின்னர் உடைந்த பீர் பாட்டிலால் அவரின் வலது பக்க கண் அருகில் குத்தி இரத்த காயம் ஏற்படுத்தியதாகவும் உன்னை உயிரோடு விடமாட்டோம் என்றும் மிரட்டிவிட்டு ஓடிவிட்டதாகவும் பின்னர் அவர் அவரின் உறவினரான பிச்சாண்டி என்பவரை வரவழைத்து 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் வேலூர் கிராமிய காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அந்த புகார் வாக்குமூலத்தைப் பதிவு செய்து வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. இவ்வழக்கில் மேலே சொன்ன சச்சின் என்பவர் 18 வயது நிரம்பாதவர் என்பதால் அவரை இளம் சிறார் விசாரணை மன்றத்திற்கு அனுப்பிவைத்துவிட்டு மற்ற 6 பேருக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்து விசாரணை

மேற்கொள்ளப்பட்டது.

20. இவ்வழக்கில் 1 முதல் 12 சாட்சிகள் பட்டியலில் காண்பிக்கப்பட்டு அ.சா.1 முதல் அ.சா.10 வரை சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.ஆ.1 முதல் அ.சா.19 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் 1 முதல் 6 எதிரிகள் மற்றும் இளம் சிறார் சச்சின் ஆகியோர் சட்ட விரோதமாக ஒன்று கூடியதன் விளைவாக இ.த.ச. பிரிவு 147 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் படிக்கும், இவ்வழக்கின் 1ம் எதிரி அ.சா.1 ஐ இறப்பை ஏற்படுத்தக் கூடிய பீர் பாட்டிலை கையில் வைத்திருந்து தாக்கியதால் இ.த.ச. பிரிவு 148 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகள் அ.சா.1 ஐ பார்த்து பர தேவிடியா பையா வன்னியர் நடத்தும் திருவிழாவில் நீ ஏன்டா கலந்து கொள்கிறாய் என்று அவரின் சாதி பெயரைச் சொல்லி பொதுவெளியில் அருவருக்கத்தக்க வார்த்தைகளில் திட்டியதால் இ.த.ச. பிரிவு 294 (b) உ/இ 3 (1) (r) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகள் பர தேவிடியா பையா வன்னியர் நடத்தும் திருவிழாவில் நீ ஏன்டா கலந்து கொள்கிறாய் என்று பொது வெளியில் பொது மக்களின் பார்வையில் அ.சா.1 ஐ இழிவுபடுத்தும் வகையில் சாதி பெயரைக் குறிப்பிட்டு பேசியதால் பிரிவு 3 (1) (s) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 2, 3, 4 மற்றும் 6ம் எதிரிகள் அ.சா.1 ஐ அவரது உடம்பு, கை, தோள்பட்டை ஆகிய இடங்களில் அடித்து காயம்

ஏற்படுத்தியதன் காரணமாக இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; மேற்கண்ட சம்பவத்தில் மேற்கண்ட எதிரிகளுடன் கலகத்தை விளைவிக்கும் நோக்கத்தில் ஒத்த கருத்துடன் இருந்த 1 மற்றும் 5 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் உ/இ 149 படிக்கும், 1ம் எதிரி அ.சா.1 ஐ பீர் பாட்டிலால் தாக்கி கொடுங்காயம் புறத்தூண்டுதலின்றி தானாகவே ஏற்படுத்தியதால் இ.த.ச. பிரிவு 326 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 2 முதல் 6 எதிரிகள் மேற்கண்ட சம்பவத்தின் போது வந்த சட்ட விரோத கும்பலில் அங்கத்தினர்களாக இருந்ததால் இ.த.ச. பிரிவு 326 உ/இ 149 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்படிக்கும்; மேற்கண்ட சம்பவத்தின் தொடர்ச்சியாக இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகள் அ.சா.1 ஐ அடித்து கொலை செய்துவிடுவேன் என்று கூறி குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததால் இ.த.ச. பிரிவு 506 (ii) உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்படிக்கும் குற்றச்சாடுகள் வனையப்பட்டது. எதிரிகளிடம் குற்றச்சாட்டு குறித்து வினவியபோது எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்ததைத் தொடர்ந்து இவ்வழக்கு உத்தரவிடப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது அரசு தரப்பு சாட்சிகள் 1 முதல் 10 வரையிலும் சான்றாவணங்கள் 1 முதல் 19 வரையிலும் குறியீடு செய்யப்பட்டது.

21. அரசு தரப்பின் சாட்சிகள் விசாரிக்கப்பட்ட பிறகு எதிரிகளுக்கு எதிராக சாட்சிகள் சொன்ன விவரங்களை எடுத்துரைத்து கு.வி.மு.ச. பிரிவு 313 (1) ன் கீழ் எதிரிகளை வினவியபோது எதிரிகள் அரசு தரப்பின் சாட்சிகளை பொய் சாட்சி என்று மறுத்துவிட்டு எதிகள் தரப்பில் சாட்சியம் இருப்பதாக குறிப்பிட்டார்கள். ஆனால் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அதன் பிறகு இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

22. அரசு தரப்பில் வாய் மொழி வாதங்கள் முன் வைக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வாய் மொழி வாதங்கள் முன்வைக்கப்பட்டு எழுத்து மூலமான வாதுரையும் தாக்கல் செய்யப்பட்டது.

**<u>இரு தரப்பு வாதங்கள் :—</u>**

**<u>23. அரசு தரப்பின் வாதம்:—</u>**

இவ்வழக்கில் வாதிட்ட கற்றறிந்த அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் காயம்பட்டவர்களும் காயம்பட்ட அ.சா.1ம் கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 அன்பு, கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.2 அஜீத்குமார், பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அ.சா.3 சந்தோஷ் குமார், அ.சா.6 முருகவேல் மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்த அ.சா.4 பிரபு ஆகியோர் அரசு தரப்புக்கு சாதகமாக சாட்சியம் அளிக்காதபோதிலும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.8 சிலம்பரசன் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார் என்றும், 1ம் எதிரி தன்னிச்சையாக குற்றம் செய்ததை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றும், அதே

போல் இவ்வழக்கில் முதற்கட்ட விசாரணை நடத்திய ஆய்வாளர் நரசிம்மன், இவ்வழக்கை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திருநாவுக்கரசு சம்பவம் குறித்தும் சாட்சிகளை விசாரணை செய்தது குறித்தும் வழக்கு சொத்தை கைப்பற்றியது குறித்து 1ம் எதிரி வாக்குமூலம் கொடுத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும் அவர்கள் சாட்சியங்கள் மூலம் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

<u>24. எதிரிகள் தரப்பு வாதம்</u>:-

எதிரிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கின் எதிரிகள் சட்ட விரோதமாக ஒன்று கூடினார்கள் என்பதையும் 1ம் எதிரி பீர் பாட்டிலால் தாக்கினார் என்பதையும் அரசு தரப்பில் வழக்கில் கூறியுள்ளது போல் மற்ற எதிரிகள் அ.சா.1 ஐ தாக்கினார்கள் என்றும் அவர்களை இழிவாகவும் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசியதாகவோ அவரை சாதி பெயரை சொல்லி திட்டியதாவோ யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும் அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரிக்கவில்லை என்றும், எதிரிகள் தாக்கியதால்தான் அவருக்கு காயம் ஏற்பட்டதாக அ.சா.1 சொல்லவில்லை என்றும் அரசு தரப்பின் தனிப்பட்ட சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர், இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொண்ட காவல் துணை கண்காணிப்பாளர், சாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியர் மட்டும் சாட்சியம் அளித்ததன் அடிப்படையில் இவ்வழக்கு அரசு தரப்பினரால் நிரூபிக்கப்பட்டுள்ளதாக

தீர்மானிக்க முடியாது என்றும், காயம்பட்ட சாட்சிகளும் முக்கிய சாட்சிகளும் பிறழ் சாட்சியாகி உள்ள நிலையில் சம்பவம் நடந்தது குறித்து சந்தேகம் எழுகின்றது என்றும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுவிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

**25. பிரச்சினைக்கான தீர்வும் தீர்விற்கான காரணங்களும்:-**

இவ்வழக்கில் மேலே சொன்ன குற்றச்சாட்டுகள் குறித்து அரசு தரப்பில் காயம்பட்ட அ.சா.1 ஐ விசாரிக்கும்போது அவர் தன்னுடைய சாட்சியத்தில் சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு கம்மவான் பேட்டை ஆடல், பாடல் நிகழ்ச்சிக்கு சென்றிருந்ததாகவும் அப்போது அவரும் அவரது நண்பர் அன்புவும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அந்த திருவிழாவில் சண்டை நடந்ததாகவும் அதில் அவர் மாட்டிக்கொண்டதாகவும் அந்த ஊரில் அவரை அடித்துவிட்டார்கள் என்றும் அவரின் முதுகு, தலையில் அடிபட்டுவிட்டது என்றும் சண்டையில் அவரை யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் அங்கிருந்து வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு போய் சேர்ந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அரசு தரப்பில் குறிப்பிட்டது போல் 1ம் எதிரி பீர் பாட்டிலால் தாக்கியதாகவோ 1 முதல் 6 எதிரிகள் அவரை அருவருக்கத்தக்க வார்த்தைகளால் பேசி சாதி பெயரைக் குறிப்பிட்டு இழிவுபடுத்தியதாகவோ பொதுவெளியில் சாதி பெயரைச் சொல்லி திட்டியதாகவோ 2, 3, 4, 6 எதிரிகள் கைகளால் தாக்கியதாகவோ 1ம் எதிரி பீர் பாட்டிலால் தாக்கியதாகவோ மேலும் அவரை கொலை மிரட்டல் விடுத்ததாகவோ

குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. அந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.1ன் நண்பர் அன்பு (அ.சா.5) தனக்கு சம்பவத்தைப் பற்றி தெரியாது என்றும் யார் அடித்தார்கள் என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இந்த வழக்கைப் பற்றி அவருக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

26. இவ்வழக்கில் சம்பவம் பற்றி தெரிந்ததாக விசாரிக்கப்பட்ட அ.சா.2 அஜீத்குமார் அ.சா.1 ன் சகோதரர் ஆவார். அவர் சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்டதாக மட்டும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்களை மட்டும் ஒப்புக் கொண்டு போலீசார் கேட்டுக்கொண்டதால் வெள்ளை பேப்பரில் கையொப்பம் செய்ததாகவும் அதில் உள்ள விவரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4 1ம் எதிரி கொடுத்ததாகக் கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் கையொப்பம் செய்ததாகவும் அதில் உள்ள விவரங்கள் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அதேபோல் அ.சா.6 பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையொப்பங்களை மட்டும் அடையாளம் காண்பித்து மற்ற விவரங்கள் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார். அவர்கள் அனைவரையும் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.8 சிலம்பரசன் மட்டும் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது உடன் இருந்து ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம்

கொடுத்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அதில் உள்ள விவரங்கள் படித்து பார்க்கவில்லை என்றும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

27. அ.சா.7, சாதி சான்றிதழ் வழங்கிய தனி வட்டாட்சியல் ஆவார். அவர் அ.சா.1 ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் என்றும் இவ்வழக்கின் எதிரிகளும் மேலே சொன்ன சச்சின் என்பவரும் வன்னியர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் சான்றிதழ் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.9 புகார் வாக்குமூலத்தைப் பற்றி வழக்கு பதிவு செய்து SC/ST வழக்கு என்பதால் மாவட்ட கண்காணிப்பாளருக்கு கடிதம் வைத்து புலன் விசாரணை அதிகாரி நியமிக்க கோரியது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.10 சம்பவ இடத்தை பார்வையிட்டது குறித்தும் புலன் விசாரணை செய்ததது குறித்தும் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்து மருத்துவரை விசாரித்தது குறித்து சாதி சான்றிதழ் வழங்கிய வட்டாட்சியரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் எதிரிகள் கலகம் விளைவிக்கும் நோக்கத்தோடு சட்ட விரோத கும்பலில் இருந்தார்கள் என்பதற்கு சாட்சியம் இல்லை. மேலும் 1ம் எதிரி பீர் பாட்டிலால் அடித்தார் என்று எவரும் சொல்லவில்லை. அ.சா.10ன் மூலம் மருத்துவ சான்றிதழ் அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கிய மருத்துவர் கிஃப்டன் ஜோசப்

அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. மேலும் அ.சா.1க்கு X–ray எடுத்து சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. நுண்கதிர் நிபுணர் மருத்துவர் பரந்தாமன் என்பவர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார், அவரும் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. அவர் வழங்கிய சான்று புலன் விசாரணை அதிகாரி அ.சா.10 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

28. 1ம் எதிரி தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று அ.சா.10 சாட்சியம் அளித்துள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அ.சா.8 சாட்சி கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளபோதிலும் 1ம் எதிரி போலீசாரின் பிடியில் இருக்கும்போது பதிவு செய்யப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எதிரி கொடுத்ததாகக் கூறும் ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிக்கு எதிராக நிரூபிக்க முடியாது என இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 25ல் உள்ளது. மேலும் காவலர் பிரிவில் இருக்கும்போது எதிரி கொடுக்கும் வாக்குமூலத்தை ஏற்கமுடியாது என்றும் பிரிவு 26ல் கூறப்பட்டுள்ளது. விதிவிலக்காக உள்ள பிரிவு 27ல் கண்டுள்ளபடி வாக்குமூலத்தின் அடிப்படையில் எந்த புதிய பொருண்மையும் கண்டறியப்படவில்லை. எனவே அந்த வாக்குமூலம் ஏற்புடைய வாக்குமூலம் இல்லை. அதனால் அதை கருத்தில் கொள்ள முடியாது. அது தவிர இந்த வழக்கின் எதிரிகளை சம்பவத்தோடு தொடர்பு படுத்தி வேறு எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை.

29. அ.சா.1 அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது கொடுத்ததாக அ.சா.ஆ.10 புகார் வாக்குமூலம் குறியீடு

செய்ய்பட்டுள்ளது. அதில் உள்ள சங்கதிகளை அ.சா.1 மறுத்து அவரது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் சம்பவ இடத்தை அ.சா.10 பார்வையிட்டு தயாரித்ததாக கூறும் மகசர் சாட்சிகள் யாரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் சம்பவ இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாக கூறும் சா.பொ.1 கைப்பற்றப்பட்டபோது சாட்சியாக இருந்த அ.சா.3 மற்றும் அ.சா.6 ஆகியோர் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் திருவிழாவின்போது சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டிருந்தபோதிலும் ஊரில் உள்ள மற்ற நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் எவரும் அரசு தரப்பு சாட்சியாக விசாரிக்கப்பட்ட சாட்சிகளில் அ.சா.1, 2, 3, 4, 5 மற்றும் அ.சா.6 ஆகிய எவரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.8 அரசு தரப்புக்கு சாதகமாக சாட்சியம் அளித்திருந்தபோதிலும் அவர் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளித்த அ.சா.7 சாட்சியத்தின் அடிப்படையிலோ, அ.சா.9 சாட்சியத்தின் அடிப்படையிலோ, அ.சா.10 துணை கண்காணிப்பாளர் (புலன் விசாரணை அதிகாரி) சாட்சியத்திடின் அடிப்படையிலோ அரசு தரப்பின் வழக்கு நிரூபிக்கப்பட்டதாக தீர்மானிக்க முடியாது. எனவே எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொருத்து அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட காயம்பட்ட நபர் மற்றும் சம்பவத்தை நேரில் பார்த்தாக விசாரிக்கப்பட்ட நபர் எவரும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் அ.சா.1 முதல்

அ.சா.6 வரை உள்ளவர்கள் பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்ட நிலையில் அவர்களது சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகள் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. அந்த முரண்பாடுகள் குறித்த எதிரிகள் தரப்பின் வாதம் எதிரிகளுக்கு ஆதரவாக அமைந்துள்ளது. எனவே அந்த முரண்பாடுகளால் சந்தேகம் எழுவதால் அரசு தரப்பு வழக்கினை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

30. எனவே இந்த வழக்கில் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 147 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 1ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 148 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 294 (b) உ/இ 3 (1) (r) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக பிரிவு 3 (1) (s) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; இவ்வழக்கின் 2, 3, 4 மற்றும் 6ம் எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப் படிக்கும்; 1 மற்றும் 5 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 323 உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம் உ/இ 149 படிக்கும்; 1ம் எதிரிக்கு எதிராக இ.த.ச. பிரிவு 326 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்

படிக்கும்; இவ்வழக்கின் 2 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 326 உ/இ 149 உ/இ 3 (2) (v) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்படிக்கும்; இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகளுக்கு எதிராக இ.த.ச. பிரிவு 506 (ii) உ/இ 3 (2) (va) தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டப்படிக்கும் வனையப்பட்ட குற்றசாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என தீர்மானித்தும் 1 முதல் 6 எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்தும் எதிரிகள் கு.வி.மு.ச பிரிவு 235 (1) (Cr.P.C) படிக்கு எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று தீர்மானித்து அவர்களுக்கு எதிராக வனையப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து விடுதலை செய்யவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>31. தீர்வு</u>**

முடிவாக எதிரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியதன் காரணமாக சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு சாதகமாக்கி எதிரிகளை இவ்வழக்கின் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் இருந்து விடுவித்து கு.வி.மு.ச. பிரிவு 235 (1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

32. இந்த வழக்கில் வழக்கு சொத்தாக கைப்பற்றப்பட்டுள்ள சா.பொ.1 (C.P.No.16/2023) பீர்பாட்டில் உடைந்த நிலையில் உள்ளது. ஆனால் இவ்வழக்கில் இளம் சிறாருக்கு எதிரான மற்றொரு வழக்கு இதே சம்பவத்தின் சார்பாக நிலுவையில் இருப்பதால் அந்த வழக்கில்

இந்த வழக்கு சொத்து குறித்து ஏற்படும் உத்தரவைப் பொருத்து வழக்கு சொத்தை கையாளவேண்டும். அந்த வழக்கு முடிவுற்றிருந்தால் இந்த வழக்கு சொத்து அந்த வழக்கிற்கு தேவைப்படாது என்றால் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அந்த சொத்தை குற்றவியல் நடைமுறை விதி 262 படிக்கு அழிக்க உத்தரவிடப்படுகிறது. எதிரிகள் இந்த வழக்கில் எழுதிக் கொடுத்த பிணையப் பத்திரம் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G RADHAKRISHNAN

Digitally signed by G RADHAKRISHNAN
Date: 2025.09.15 19:18:58 +0530

**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர்**
**மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை**
**தடுப்பு சட்டம், வேலூர்.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:–**

| | |
|---|---|
| அ.த.சா.1 | திரு.கி.சூர்யா (புகார்தாரர்) |
| அ.த.சா.2 | திரு.கி.அஜீத்குமார் |
| அ.த.சா.3 | திரு.தே.சந்தோஷ்குமார் |
| அ.த.சா.4 | திரு.பி.பிரபு |
| அ.த.சா.5 | திரு.ப.அன்பு |
| அ.த.சா.6 | திரு.ஜெ.முருகவேல் |
| அ.த.சா.7 | திரு.பா.செந்தில் (வட்டாட்சியர்) |
| அ.த.சா.8 | திரு.கு.சிலம்பரசன் |

| | |
|---|---|
| அ.த.சா.9 | திரு.ரா.நரசிம்மன் (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.த.சா.10 | திரு.எ.திருநாவுக்கரசு (காவல் துணை கண்காணிப்பாளர்) |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>:–**

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1 | புகாரில் உள்ள அ.த.சா.1ன் கையொப்பம் (அ.த.சா.1 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.2 | பார்வை மகசரில் உள்ள அ.த.சா.3ன் கையொப்பம் (அ.த.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.3 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.த.சா.3ன் கையொப்பம் (அ.த.சா.3 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.4 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.த.சா.4ன் கையொப்பம் (அ.த.சா.4 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.5 | பார்வை மகசரில் உள்ள அ.த.சா.6ன் கையொப்பம் (அ.த.சா.6 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசரில் உள்ள அ.த.சா.6ன் கையொப்பம் (அ.த.சா.6 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.7 | மெய்த்தன்மை அறிக்கை (அ.த.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.8 | அ.சா.1 ன் சாதி குறித்து அ.த.சா.7 வழங்கிய அறிக்கை (அ.த.சா.7 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.9 | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.த.சா.8ன் கையொப்பம் (அ.த.சா.8 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.10 | புகார் வாக்குமூலம் (அ.த.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.11 | முதல் தகவல் அறிக்கை (அ.த.சா.9 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.12 | செயல்முறை ஆணை (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.13 | மாதிரி வரைபடம் (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.14 | பார்வை மகசர் (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.15 | கைப்பற்றுதல் மகசர் (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.16 | அ.சா.1 ன் காயசான்று (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.17 | அ.சா.1 ன் நுண்கதிர் படம் மற்றும் சிடி ஸ்கேன் எடுத்த அறிக்கை (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.18 | பிரிவு மாற்ற அறிக்கை (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |
| அ.த.சா.ஆ.19 | படிவம் 95 (அ.த.சா.10 மூலம் குறியீடு செய்யப்பட்டது) |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–** இல்லை.

**அரசு தரப்பு சான்று பொருட்கள்:–**

| | |
|---|---|
| சா.பொ.1 | உடைந்த பீர் பாட்டில் (C.P.No.16 / 2023) |

G RADHAKRISHNAN

Digitally signed by G RADHAKRISHNAN
Date: 2025.09.15 19:18:48 +0530

**அமர்வு நீதிபதி,**
**சிறப்பு நீதிமன்றம், தாழ்த்தப்பட்டோர்**
**மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை**
**தடுப்பு சட்டம், வேலூர்.**

Copy to: (As per Rules 108 and 115 of Cr.R.P. – 2019)

1. The Registrar General, High Court of Madras, Chennai – 104.
2. The Principal District Judge, Vellore District.
3. The District Collector, Vellore.
4. The Superintendent of Police, Vellore.
5. The Inspector of Police, Vellore Taluk Police Station, Vellore.
   Through Special Public Prosecutor,
   Special Court for SC/ST (PoA) Act , Vellore.
6. Spare Copies